**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 250 Of 2024

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19- வது நாள் வியாழக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. E. சபரிராஜன் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. ஈஸ்வரன் | வேலை: | Regional Manager, M/s. Glosil International Pvt LTD. |
| வயது | 30 | செல்போன் எண் | |

வா.சா.2 திரு. E. சபரிராஜன் ஆக 19.06.2025 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன். எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில்

நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆவணம் ஏதுமில்லை.

__குறுக்கு விசாரணை__

நீங்கள் எந்த பகுதிகளுக்கு Regional Manager ஆக இருக்கிறீர்கள் என்றால் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலத்திற்கு Regional Manager ஆக உள்ளேன். உங்கள் கீழ் எத்தனை நபர்கள் பணிபுரிகிறார்கள் என்றால் யாருமில்லை நான் மட்டும் தான் இருக்கிறேன். வாடிக்கையாளர்களிடம் ஆடர்கள் எடுப்பேன். ஜோஸ் டானியல் உங்களுக்கு முன்பாக பணியில் இருந்தாரா என்றால் ஆமாம். பிரதிவாதி நிறுவனத்துடன் வாதி நிறுவனத்திற்கு எத்தனை வருடங்களாக வியாபாரம் இருந்து வருகிறது என்றால் கடந்த 2018ல் இருந்து நடந்து வருகிறது. பிரதிவாதி நிறுவனம் கன்னியாகுமரி, விருதுநகர், சென்னை மற்றும் திருநெல்வேலியில் சப்ளை செய்து வந்ததை நீங்கள் மேற்பார்வை செய்கிறீர்களா என்றால் பிரதிவாதி நிறுவனம் அவர்களது வாடிக்கையாளர் எங்கிருக்கிறார்களோ அங்கு சப்ளை செய்வார்கள், இந்த 4 இடங்கள் மட்டும் அல்ல. உங்களுக்கு வாதி நிறுவனத்தில் என்ன வேலை என்றால் வாடிக்கையாளர்கள் கொடுக்கும் ஆர்டர் படி சப்ளை செய்ய வலியுறுத்துவது. பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனத்தின் Distributorship கொடுத்தார்களா, அது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் Distributorship அல்ல Customer தான், அது பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கும் பிரதிவாதி நிறுவனத்திற்கும் தொலைபேசி, மின்னஞ்சல், Whatsapp தொடர்பு உண்டா என்றால் உள்ளது. வாதி நிறுவனத்தில் உங்களுக்கு தனிப்பட்ட மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் உள்ளதா என்றால் உள்ளது. உங்கள் மின்னஞ்சல் முகவரி என்ன என்றால் asm_@glosil.in. பிரதிவாதி நிறுவனம் சார்பாக Purchase Order யார் raise செய்வார்கள் என்றால் பிரதிவாதியோ அல்லது Executiveவோ செய்வார்கள். Purchase Order எடுக்கும் போது Executive செல்வார்களா என்றால் இல்லை, பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் Product Technical support தருவோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரி என்னுடையது தான். நான் இரண்டாம் பிரதிவாதி ராஜபதி என்பவருக்கு அனுப்பிய மின்னஞ்சல் ஆகும். **நான் அனுப்பிய மின்னஞ்சல் Ex.B1.** CC ஜோஸ் டானியலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் Distributor Price List பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவது வழக்கம். **Distributor Price List – Ex.B2**. பிரதிவாதி நிறுவனம் எடுக்கும் Order தொகை, சப்ளை செய்யப்பட்ட விவரம், தொகை செலுத்தப்பட்ட விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் Order தொகை விவரம் தெரியும், வரவு செலவு கணக்கு விவரங்கள் தெரியாது. Incentive தொகை எந்த Head ல் இருந்து பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு உங்கள் நிறுவனத்தின் உத்தரவுப்படி மின்னஞ்சல் அனுப்புவது வழக்கம். பிரதிவாதி நிறுவனம் சப்ளை செய்யும் நான்கு மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், சென்னை மற்றும் கன்னியாகுமரியில் பிரதிவாதி அல்லாது தனிப்பட்ட முறையில் நீங்கள் ஆர்டர் எடுத்து சப்ளை செய்துள்ளீர்கள் என்றால் சரிதான், வாடிக்கையாளர் எங்கிருந்தாலும் ஆர்டரின் அடிப்படையில் சப்ளை

செய்வது வழக்கம். வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு Distributorship தான் கொடுத்துள்ளது, வாடிக்கையாளர் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு Distributorship Incentive கொடுக்கக்கூடாது என்ற காரணத்தினால் தான் பிரதிவாதியை வாடிக்கையாளர் என சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல நன்றாக வியாபாரம் செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் Incentive கொடுப்பது வழக்கம். பிரதிவாதி நிறுவனம் வாதி நிறுவனத்திற்கு எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை, உங்கள் நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு தற்சமயம் வரை incentive தொகை கொடுக்க வேண்டி உள்ளது, வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.06.19 17:41:17 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.